**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையம் - 2017**

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

சபையின் இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 2**

காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாடுகள் திட்டவட்டமாக இனங்காணப்பட்டு கணக்கு காலப்பகுதிக்குரிய நிதி அசைவுகள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போது ஆரம்ப அட்டுறு செலவின மீதிகளில் உள்ள மூலதன சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக அட்டுறுவாக்கப்பட்ட செலவினம் அகற்றப்படாமல் தொழிற்படு மூலதன அசைவில் சீராக்கப்பட்டமை காரணமாக செயற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 2,032,625 ஆல் குறைந்து காண்பித்த காரணத்தினால் காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 3**

கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய மற்றும் சபையின் நிலையான சொத்தொன்றாக காணப்பட்ட ரூபா 1,200,610 கிரய பெறுமதியான உருவப்படங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி முதல் சபையினால் அகற்றப்பட்டிருந்ததால் இது தொடர்பாக சொத்துக்களின் ஆயுட்காலம் தொடர்பாக இடம்பெற்றுள்ள மதிப்பீடுகளின் வேறுபாட்டிற்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

சபையினால் இருப்புக் கிரயத்திற்கு பெறுமதி மதிப்பிடப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சகல இருப்புப் பெறுமதிக்காகவும் அந்தக் கொள்கை பின்பற்றப்படாதிருந்ததுடன் கிரயம் தவிர வேறு அடிப்படையிலும் இருப்பு பெறுமதியிடப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீண்டெழும் நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்தி நிலையான சொத்துக்களை கையேற்கும் போது அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 155,081 தொகையான தொகையை மீண்டெழும் நிதிஏற்பாடுகளிலிருந்து அரச மூலதன மானியக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆவணங்கள் மானியக் செயற்திட்டத்திற்காக ஆண்டின் பாதீட்டு நிதிஏற்பாட்டை மிகைத்து கணக்கீடு செய்யப்பட்டமையால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 49 ஆவண பேருக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,215,053 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்கின் பிரகாரம் புத்தக இருப்பின் பெறுமதி ரூபா 4,367,889 ஆக இருந்ததுடன் பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 7,895,098 ஆக இருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் இருப்பு ரூபா 3,527,209 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,457 தொகையான இருப்புப் பற்றாக்குறை தொடர்பான பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் / அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன ஒதுக்க கணக்கின் இறுதி மீதி ரூபா 23,678,741 ஆக இருந்த போதிலும், அதற்குரிய வங்கி மீதி ரூபா 22,448,787 ஆனமையால் ரூபா 1,229,954 தொகையான செலவினம் மேற்கொள்ளப்படாத ஒதுக்கீட்டுத் தொகையை பிரதிநிதித்துவப்படுத்தாமை

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடர்கடன் மீதி ரூபா 12,762,122 தொகையாக இருந்ததுடன் இடர்கடன் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 12,827,184 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 65,062 தொகையில் இனங்காணப்படாத மீதிகளாக் முன்னைய ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 2 (அ),(ஆ), (உ) ஆம் பிரிவுகளின் பிரகாரமும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரமும் நிலையான சொத்துக்களுக்காக நியம வகைப்படுத்தலொன்றை ஏற்படுத்துதல், சொத்துக்களை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் அவற்றின் நிர்வகித்தலை இலகுபடுத்தும் வகையில் ஒவ்வொரு நிலையான சொத்திற்காகவும் திணைக்கள ரீதியான இலக்கமொன்று மூலம் சொத்துக்களை இனங்கண்டு பதிவேடுகளுக்கு உட்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றப்படாமை காரணமாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 171,324,300 கிரயத்திலான சொத்துக்களின்

நிலைத்திருதன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதில் ரூபா 106,790,091 பெறுமதியான தேசிய நூலக புத்தக இருப்புக்கள் 1976 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 41 வருடங்களாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**2.3.1 பெற வேண்டிய கணக்குகள்**

ரூபா 248,496 தொகையான நானாவித முற்பணம் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 121,970 பெறுமதியான மீதி இனங்காண முடியாத முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய 2 முதல் 11 வருடங்கள் வரையிலான பழைய ரூபா 750,215 ஆன நிறுத்தி வைத்தல் வரித் தொகை 2018 திசெம்பர் 18 ஆந் திகதி வரையும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபை சட்டத்தின் 7 ஆம் பிரிவு | அமைச்சரின் முன் அங்கீகாரத்தின் கீழ் குழுவை நியமதித்தல் மற்றும் அவற்றின் செயற்படுநிலை தொடர்பான விதிகளைத் தயாரித்தல் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டு அபிவிருத்திக் கொள்கையின் கீழ் வெளியீடுகளை கொள்வனவு செய்தலை நிர்ணயிக்கும் குழுவை நியமிக்கும் போது, அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், குழுவின் செயற்பாடு தொடர்பாக 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக விதிகளைத் தயாரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 507 4(அ),(ஆ) பிரிவுகள் | கணக்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள அளவு மற்றும் உள்ளவாறு காணப்படும் இருப்பிற்கு இடையே வேறுபாடு மற்றும் அது தொடர்பான கையிருப்பிலுள்ள புத்தகங்களின் பெறுமதி மற்றும் கணிப்பீட்டு சபையின் மதிப்பீட்டிற்கு இடையே எதேனும் விலகல் காணப்பட்டால் அது தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 757 இன் பிரகாரம் புறம்பாக செயற்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 756<br>5 (அ) பிரிவு | பொருட்கள் சரி பிழை பார்ப்பிற்காக ரீ மற்றும் ஏ 66 மாதிரிப் பத்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அம் மாதிரி பயன்படுத்தப்படாமை காரணமாக மெய்மையாய்வு செய்யப்பட்ட திகதி பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட மீதி மெய்மையாய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 1646 | வாகன பொறுப்பு உத்தியோகத்தர்களினால் பிரயாணம் தொடர்பான மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் அந்தந்த மாதத்தின் ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள், கணனி துணைபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சகல வருமானத்தையும் திரட்டு நிதிக்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் பொது திறைசேரியுடன் வாய்மொழி மூலம் இணங்கிய விடயத்தின் பிரகாரம் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் சபைக்கு கிடைக்கும் வாகனங்களின் ஆரம்ப ஆண்டின் மாதாந்த வாடகை அத்தொகையில் கொடுப்பனவிற்காக வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 2,710,862 தொகை வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 7,801,955 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு முன்னைய நேரொத்த ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 14,817,209 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,015,254 ஆன அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்வாகச் செலவினம் ரூபா 7,291,540 இனாலும் நூலகச் சேவைச் செலவினம் ரூபா 1,308,222 இனாலும் அதிகரித்த போதும் மீளாய்வாண்டின் அரச மானியம் ரூபா 12,700,000 இனால் அதிகரித்தமை மற்றும் ரூபா 2,130,466 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனை இலாபம் என்பன மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 13,747,104 தொகையான பற்றாக்குறை மீளாய்வாண்டளவில் ரூபா 7,801,955 வரை குறைவடைந்திருந்தது. எனினும் ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 55,556,073 தொகையான சபையின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 102,455,957 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு அத்தியாயங்களையும் முன்னுரையையுமுடைய பன்சியபனஸ் ஜாதக்க பொத்த ஐந்து புத்தகங்களையுடையது. அதனை மீண்டும் அச்சிடுவதற்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக மீண்டும் அச்சிடல் நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்வதற்கு 2015 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் 05 புத்தகங்களின் முன்னுரைகள் மற்றும் 02 அத்தியாயங்கள் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. III மற்றும் IV என்ற 02 அத்தியாயங்களில் கணக்காய்வுத் தினமான 2019 யூன் 21 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1850 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்டிருந்த பழைய இலக்கிய நூற்கள் மற்றும் 1851 முதல் 2000 ஆம் ஆண்டு வரையும் அதற்குரியதாக வெளியிடப்பட்டுள்ள சரவைகளை உள்ளடக்கி சாடிகாரி சிங்கள நூல் பெயர் வழிகாட்டியை கையளிக்கும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதும் கணக்காய்வுத் திகதியான 2019 யூன் 21 வரையும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்காக உத்தேசிக்கப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக முன்னரே திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில செயற்பாடுகளுக்காக நடாத்தப்பட வேண்டிய உத்தேச நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக முன் திட்டங்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டில் கிடைக்கும் வேண்டுகோள் கருத்திற் கொள்ளப்பட்டு செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு புறம்பாக விரிவான பாதீடொன்று ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் விரிவான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் உள்ளடக்கப்பட்ட 2 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் விவரன புத்தகம் மீள் அச்சிடலின் கீழ் அச்சிடப்பட்ட வெளியீடுகளுக்கு இடையே ரூபா 8,166,980 பெறுமதியான 4 வெளியீடுகளுக்குரிய வெளியீடுகளில் விற்பனை விலை அச்சிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பூஜாவலி கிரந்தம் வெளியீட்டின் இலக்க களஞ்சியத்திலிருந்து மாற்றி அனுப்பும் போது 57 புத்தகங்கள் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதன் விற்பனை பெறுமதி ரூபா 138,510 ஆக இருந்தது.

### 4.3 மனித வள முகாமைத்துவம்

-----------------------------------------------------

(அ) முன்னால் பணிப்பாளர் நாயகத்தினால் பிரதான நிறைவேற்றுனர் பதவியில் இருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்ட நியமன திகதியிலிருந்து அமுலாகும் வகையில் பணிப்பாளர் நாயகம் பதவியில் 10 ஆவது சம்பள படிமுறையில் வைப்பதற்கு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் (நிர்வாகம்) அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2012 மே 22 ஆந் திகதி வெளியிடப்பட்ட பொது முயற்சிகள் குழு தீர்மானம் கணக்காய்வு திகதியான 2019 யூன் 21 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையில் காணப்பட்ட 7 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2018 ஏப்ரல் மாத்தின் போது நேர்முகப் பரிசோதனையொன்று நடாத்தப்பட்டு அதன் பிரகாரம் 4 வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பட்டிருந்ததுடன் 3 வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

### 4.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை

---------------------------------------------------------

2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் இலக்க மாதிரிபடிவத்தின் பிரகாரம் வாகன கைதவிர்பபுச் செய்ற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு அது தொடர்பான விரிவான அறிக்கையொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய துடன் அதனி பிரதிகள் அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம், திறைசேரியின் செயற்பாட்டு பணிப்பாளர், தேசிய பாதீட்டு பணிப்பாளர்நாயகம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் பொது முயற்சியொனறாக இருக்கையில் பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்திற்க அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் சபை அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

--------------------------------------------------------------

பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டமையினால் அரசாங்க மூலதன மானியக் கணக்கில் வருடாவருடம் சேமிக்கப்பட்டு வந்த மீதி 2017 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 30,442,949 ஆகும். மீளாய்வாண்டிற்காக ரூபா 9,000,000 தொகையான மூலதன மானியம் கிடைத்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 15,764,208 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23,678,741 தொகை பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------------------

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-------------------------------------------------------------------

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்கபொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் மற்றும் அதன் பிரதி உரிய அமைச்சிற்கும், பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1 வருடமும் 3 மாத கால தாமதத்தின் பின்னர் 2019 யூன் 12 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2018 ஆம் கணக்காண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை இந்த அறிக்கைத் திகதி வரையிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5.2 நிதிக்கூற்றுக்கள், புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல்

2017 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அல்லது அண்மித்த திகதிகளில் பேரேடுகளில் பதிவுசெய்தல் சபையால் மேற்கொள்ள்பபட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள் கணக்காய்வு திகதியான 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 யூன் மாதம் நிதிக்கூற்றுக்களில் பின்னர் பேரேடுகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பக்கங்களுக்க இலக்கமிடல், கணக்குகளை முறையே கோவைப்படுத்தல் மற்றும் பேரேட்டுக் கணக்குள் பெயரிடப்பட்டு இலக்கமிடப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய நூலகத்தை மேம்படுத்துவதற்காக தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் 240-02-02-02-2503-103-11 ஆம் இலக்க தலைப்பின் கீழ் 113 ஆம் இலக்க நிதிஏற்பாடு மூலம் ரூபா 500 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் 126-01-02-02-06-2102 மற்றும் 2104 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகளிலிருந்து நூலக கட்டிடத்தை நவீனமயப்படுத்தவுதற்காக ரூபா 211 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 2019 யூலை 25 ஆந் திகதி வரை ரூபா 147 மில்லியனான செலவினம் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய முறைப்படுத்தப்பட்ட காற்றுச்சீராக்கி முறைமையொன்றை ஸ்தாபிக்கும் செயற்பாட்டிற்குரிய ஒப்பந்த பெறுமதி ரூபா 59,180,857 ஆக இருந்ததுடன், அதற்காக 04 விலகல் கட்டளைகள் மற்றும் 05 மேலதிக வேலைப் பத்திரங்களுக்காக ரூபா 7,187,709.91 ஆன பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலதிக வேலைகள், புறம்பான வேலைகள் மற்றும் விலகல் ஒப்பந்தம் 10 சதவீதத்தை மிகைத்து ரூபா 1,269,624 ஆக இருந்ததுடன் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை - 2006 இன் 8.13.4 பிரிவின் பிரகாரம் நிச்சயமற்ற நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமைக்காக விலகல் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்தது.

(இ) காற்றுச்சீராக்கி முறைமை பூர்ததி செய்யப்பட்டு 2017 யூலை 07 ஆந் திகதி கையளிக்கப்பட்டதாக பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான உசசாத்துணை பணியகத்தினால் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதில் இனங்காணப்பட்டிருந்த குறைபாடுகள் அத்திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பல பிரிவுகளின் அச்சிடல் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் போது எந்தளவு அச்சீட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன என பரீட்சிப்பதற்கு உரிய வகையில் தகவல்கள் ஆவணங்களுக்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் 2017 இன் வருடாந்த பெறுகை திட்டத்தில் அதற்காக திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை – 2006 இன் 4.2.1 இல் விரிவான பெறுகை திட்டத்திற்காக மாதிரிக்கு இணங்க நிறுவகத்தின் விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்படடிருக்கவில்லை.

(ஊ) தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையினதும் இலங்கை தகவல் மற்றும் தொழில்நட்ப முகவராண்மையுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களை மேவுகை செய்யும் வகையில் இலங்கை பொது நூலகம் உட்பட 26 டிஜிடல் நூலகங்களை 02 ஆண்டுகளில் ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அதற்காக 225 மில்லியன் தொகை திரட்டு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல்

01 ஆந் திகதியில் பூர்த்தி செய்வதற்கு இருந்த செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்திற்காக இலங்கை தேசிய நூலகம் 7 நூலகங்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2018 திசெம்பர் 14 ஆந் திகதிய 170 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் செயற்திட்டக் காலம் முடிவடையும் தருவாயில் குறித்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமை காரணமாக செயற்திட்ட செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் பராமரிப்பு காலம் மற்றும் சேவைகள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அதற்கான நிதிப் பங்களிப்பு தொடர்பாகவும் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

(ii) செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டவுடன் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 26 நூலகங்கள முதலாவது கட்டத்தின் கீழ் 6 நூலகங்களின் மாத்திர்ம வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

## 5.4 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற அலுவலக தளபாட உபகரணங்களின் கிரயப் பெறுமதியான ரூபா 23,089,464 தொகையில் ரூபா 936,787 பெறுமதியான நடைமுறைச் சொத்துக்களின் இருப்பொன்று உள்ளடங்கியிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,306,632 கூட்டுப்பெறுமதியான சொத்துக்களுக்குரிய சொத்துக்களின் வகுப்பு இனங்காணப்படாமையின் காரணமாக அந்த சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டு வரப்படாமை |
| | (ii) இருப்புக்கள் வருடாந்தம் பெறுமானத் தேய்வு செய்யப்படாமை |
| (ஆ) கணக்கீடு | (i) நிதிக்கூற்றுக்கள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) பேரேட்டுக் கணக்குகளுக்கும் அட்டவணைகளுக்கும் இடையே இணங்காமை காணப்பட்டமை. |
| | (iii) பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யும் போது உறுதிச்சீட்டு இலக்கம் குறிப்பிடப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | களஞ்சிய இருப்பு கட்டுப்பாட்டுப் பேரேடு பேணப்படாமை |
| | | (v) | பேரேட்டுக் கணக்குகள் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| | | (vi) | செலவினப் பேரேட்டினதும், பேரேட்டினதும் பதிவுகள் மேற்பார்வை உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப் படாமை |
| (இ) | பெறுகைகள் | (i) | திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | அச்சிடப்பட்ட பொருட்களின் கொள்வனவு | (i) | திட்டமிடப்படாமை |
| | | (ii) | முன்னதாகவே தேவைகள் இணங்காணப்படாமை |